*J.M No.II,Court, Sattur* *C.C.No. 380 of 2022* நாள்:– 06.03.2026

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**குவிமுச பிரிவு 313(1)(ஆ) இன் படியான விசாரணை**

எதிரிகள் :

1) சங்கிலிபாண்டியன்
2) அஜித்குமார்
3) இன்பராஜ்

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 ஈஸ்வரன் அவருடைய சாட்சியத்தில், 01.08.2020ம் தேதி மாலை 04.00 மணிக்கு ஆறுமுகம் வீட்டு முன்பாக வைத்து எதிரிகள் அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் பேசி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்ததாகவும், மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் மனு (அ.சா.ஆ.3) ஐ கொடுத்ததாகவும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி : பொய்<br>2 வது எதிரி :பொய்<br>4 வது எதிரி :பொய் |
| 2. | கேள்வி | : | அ.சா.2 காளிராஜ் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில், 02.08.2020ம் தேதி 17.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது சாத்தூர் செந்தில் தனியார் மருத்துவமனையில் கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கீழச்சத்திரம் பால்ராஜ் மகன் ஈஸ்வரன் என்பவரை பார்த்து விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 565/2020 பிரிவுகள் 294(b), 323, 324 இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4)ஐ பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி : பொய்<br>2 வது எதிரி :பொய்<br>4 வது எதிரி :பொய் |
| 3. | கேள்வி | : | அ.சா.2 காளிராஜ் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் 06.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரியப்பன் மற்றும் முனியாண்டி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி : பொய் |

| | | | |
|---|---|---|---|
| | | | 2 வது எதிரி :பொய்<br>4 வது எதிரி :பொய் |
| 4. | கேள்வி | : | அ.சா.2- காளிராஜ சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் சாட்சிகள் ஈஸ்வரன், ஆறுமுகம், குருவையா, ஈஸ்வரி, சுதந்திரம், முனீஸ்வரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 30.09.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு மேல் சிகிச்சை அளித்த சாத்தூர் ஆரோ ஆர்த்தோ கிளினிக் மருத்துவர் திரு.செல்வக்குமார் அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று (அ.சா.ஆ.7)ஐ பெற்று அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், 30.09.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு மேல் சிகிச்சை அளித்த சாத்தூர் செந்தில் மருத்துவமனை மருத்துவர் திரு.வேலுச்சாமி அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று(அ.சா.ஆ.8)ஐ பெற்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி : பொய்<br>2 வது எதிரி :பொய்<br>4 வது எதிரி :பொய் |
| 5) | கேள்வி | : | அ.சா.2 காளிராஜ் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் 01.10.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனையின் உதவி மருத்துவர் நிரஞ்சனி அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று (அ.சா.ஆ.9)ஐ பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்தாகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் முருகன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி : பொய்<br>2 வது எதிரி :பொய்<br>4 வது எதிரி :பொய் |
| 6. | கேள்வி | : | அ.சா.2 காளிராஜ் மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் புலன் விசாரணை முடித்து சம்பவம் உண்மையென தெரியவந்ததால் வழக்கின் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளாகிய உங்கள் மீது பிரிவுகள் 294(b), 323, 324 இ.த.ச கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |

| | | | |
|---|---|---|---|
| | பதில் | : | 1வது எதிரி : பொய் வழக்கு<br>2 வது எதிரி :பொய் வழக்கு<br>4 வது எதிரி :பொய் வழக்கு |
| 7. | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | 1வது எதிரி : பொய் வழக்கு<br>2 வது எதிரி :பொய் வழக்கு<br>4 வது எதிரி :பொய் வழக்கு |
| 8) | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | 1வது எதிரி : இல்லை<br>2 வது எதிரி : இல்லை<br>4 வது எதிரி :இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரிகளிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2
சாத்தூர்.